[1990 சனவரி 19

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிராட்வே பஸ் நிலையத்தை ஒழுங்குபடுத்துவதற்கு விரைவிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பேருந்துகளைப் பொறுத்தவரையில் 2,300 பேருந்துகளில் 'ஸ்பேர் பார்ட்ஸ்' கிடைக்காத சூழ்நிலையில் ஒவ்வொரு டெப்போவிலும் சில பேருந்துகள் இயங்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் தேவையான உதிரி பாகங்களை வாங்கி அவற்றை இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது, ஓட்டுநர்களும் நடத்துநர்களும் பெருமளவில் ஒரு நான்கைந்து மாத காலத்திற்கு முன்னால் முன் அறிவிப்பு இல்லாமலேயே வேலைக்கு வராமல் இருந்த காரணத்தினால் அப்படிப்பட்டப் பேருந்துகளை சில நேரங்களிலே முழுமையாக இயக்க முடியவில்லை. குறிப்பாக இந்த 1989 ஆம் ஆண்டு மே மாதத்திலே காலை நேரத்திலே 3,324 நடைகளும் மாலையில் 6142 நடைகளும் பேருந்துகளை இயக்க முடியவில்லை. காரணம் டிரைவர்களும் கண்டக்டர்களும் போதுமான அளவுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் வேலைக்கு வராமல் இருந்துவிட்டார்கள்.

9–45 மணி

இதை நிர்வாகம் கவனிக்க வேண்டுமென்று அறிவுறுத்திய பிறகு, இப்போது சில நடவடிக்கைகளை வேகமாக எடுத்ததற்கு பிறகு, பணிக்கு வராமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது. அதனால் தடைப்பட்ட நடைகளை இப்போது தொடர்ந்து நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, தற் சமயம் நவம்பர் மாதத்தைப் பொறுத்தவரையில் காலையில் 955 நடைகளும், மாலையில் 2,181 நடைகளும் மட்டுமே செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைகளையும் கூட இன்னும் இரண்டொரு மாதங்களில் நீக்கிவிட முடியும் என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை—வண்டியூர் கண்மாயை சுற்றுலா மையமாக்கல்.

*3330. திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை—வண்டியூர் கண்மாயை அரசு சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

1990 சனவரி 19]

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரையிலுள்ள வண்டியூர் கண்மாயில் உணவகம் மற்றும் படகுத்துறை ஆகியவற்றை அமைத்துள்ளது. சிறுவர் இரயில் ஒன்று விடப்பட்டுள்ளது. மத்திய சுற்றுலாத்துறை இங்கு நிரந்தர உணவகம் மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க ரூ. 7,40,000 ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்களுக்கான ரெயில் குறைந்த தூரம் ஓடுகிறது. அதை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்கள் விளையாடுவதற்கான பூங்கா சிறிய அளவே உள்ளது. அதனை விரிவுபடுத்துவதற்கும், சிறிய அளவிலே உள்ள படகுகளை அதிகப்படுத்துவதற்கும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்களை அதிகரிப்பதற்கு திட்டம் இருக்கிறது. ஆனால் படகுகள் விடுவதைப் பொறுத்தவரையில் அங்கே எப்போது தண்ணீர் இருக்கிறதோ அப்போதுதான் படகு விட முடியும். ஏற்கெனவே 7, 8 மாதங்களாக இருக்கின்ற படகுகளே சும்மா இருக்கின்றன. இதற்குமேல் அங்கே படகுகளை அதிகரிக்க திட்டம் இல்லை.

குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*2638. திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.